17.12.2024 MCOP NO. 07/2021

சாட்சி : PW1 சிவகாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனக்கு விபத்து எப்படி நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றும், நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ13யை வழங்கிய நபரை நான் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். ம.சா.ஆ14 மருத்துவ பில்களின் உண்மை தன்மை குறித்து மருத்துவரை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது கணவர் இறக்கும் போது அவருக்கு வயது 69 என்றால் சரிதான்.

2. விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிச்சென்ற 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளதால் எனக்கு ஏதாவது இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் 2ம் எதிர்மனுதாரரை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் பாலிசியை மீறி நடந்து கொண்டதால் 3ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடிக்கு உரியது என்று சொன்னால் சரியல்ல.

3. 2 முதல் 4 மனுதாரர்கள் திருமணம் முடித்து தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது கணவரின் இறப்பினால் எந்தவிதமான வருமான இழப்பும் எனக்கு ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்பின் கீழ் இழப்பீடு தொகை மிகைப்படுத்திக் கேட்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.